Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



ஆயர் லாறன்ஸ்
மார் எப்ரேம்
ஆண்டகையின்
நினைவு நாள்

ஏப்ரல்
8

மலர் 21 ஏப்ரல் 2024 இதழ் 4

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.04.2024 | Tuesday | 10.30 am | MCC - Convocation | Mariagiri |
| 03.04.2024 | Wednesday | 10.00 am<br>3.00 pm | College Day<br>School Day | Mar Ephream<br>Marthandam |
| 04.04.2024 | Thursday | 10.00 am | College Day | MCC - Mariagiri |
| 05.04.2024 | Friday | 10.00 am | MPDN Ltd. Branch Blessing | Parvathipuram |
| 06.04.2024 | Saturday | | Ordination | Cherupalloor |
| 07.04.2024 | Sunday | | First Mass<br>Evening Prayer | Cherupalloor<br>Mtm - Cathedral |
| 08.04.2024 | Monday | 7.00 am<br>3.30 pm | Holy Mass – comm.. of Bishop Lawrence Mar Ephream<br>UCC Meeting | Mtm - Cathedral<br>Kuzhithurai |
| 09.04. 2024 | Tuesday | <br>2.30 pm | Monthly Recollection<br>School Day | Bishop's House<br>Puspagiri |
| 11.04.2024 | Thursday | 10.00 am | MPDN Ltd. Branch Blessing | Nithravilai |
| 13.04.2024 | Saturday | | Youth Meet | MIDS |
| 14.04.2024 | Sunday | | Holy Mass | Pathanamthitai |
| 15.04.2024 | Monday | 11.00 am | Marriage<br>Holy Mass | Aryankavu<br>Aryankavu |
| 16.04.2024 | Tuesday | 10.00 am | Commission Meeting | Bishop's House |
| 20.04.2024 | Saturday | | Holy Mass | Themanoor |
| 21.04.2024 | Sunday | 2.00 pm | Angels Day | |
| 22.04.2024 | Monday | 9.00 am<br>6.00 pm | Marriage<br>Jubilee – Holy Mass | Cherupalloor<br>DM-Fathimanagar |
| 24.04.2024 - 25.04.2024 | Wednesday-Thursday | | TNBC Labour Commission | Kanyakumari |
| 27.04.2024 | Saturday | 11.00 am | Marriage | Chanthanapally |
| 28.04.2024 | Sunday | 6.30 am<br>4.30 pm | Holy Mass<br>Holy Mass | Chanthanapally<br>Soosaipuram |
| 30.04.2024 | Tuesday | | Presbyteral Council | Bishop's House |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 21 ஏப்ரல் 2024 இதழ். 4

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***
***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***
***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***
***Diocese of Marthandam***



**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir. No. 3/2024 13.03.2024

## CIRCULAR

### இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான இறைவேண்டல் நாள் - மார்ச் 22, 2024

*கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/ இருபால் துறவிகளே/ இறைமக்களே,*

**தவக்கால சிறப்பு வாழ்த்துக்கள்!**

"அமைதிக்கான இறைவேண்டல் என்பது ஒரு சிலரின் பொறுப்பல்ல; மாறாக ஒட்டு மொத்த மனித குடும்பத்தின் பொறுப்பு" எனத் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். (பிப்ரவரி 4, 2024 ஞாயிறு மூவேளை உரை)

இந்த வருடம் பெங்களூருவில் கூடிய 36-வது இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையானது, "நாட்டின் தற்போதைய சமூக அரசியல் நிலைமை மற்றும் செயற்கை நுண்ணறிவின் நன்மைகளும் சவால்களும்: திருச்சபையின் பதில்" என்ற மையக் கருப்பொருளைக் கொண்டு சிந்தித்து கலந்தாலோசித்தது. பகுத்தாய்ந்து செபித்து நமது நாட்டின் இன்றைய நலனில், இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில், "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நம் நாட்டின் உயர் தத்துவம் சிதைந்து வரும் சூழலின் நிகழ்வுகளை நினைத்து கவலையும் கொண்டது.

இன்று நாம் வகுப்புவாதம், அடிப்படைவாதம், மதவாதம், பாசிசம், ஒற்றைக் கலாச்சார திணிப்பு, வெறுப்புக் கலாச்சாரம், சாதியம்

போன்றவற்றின் கோரப்பிடியில் சிக்கி மிகக் கடினமான சூழலில், ஒரு வித அச்ச உணர்வோடு வாழ்வதற்குப் பழக்கப்படுத்தப்பட்டுக் கொண்டே வருகிறோம்.

இயல்பான நமது சுதந்திர உணர்வு, அரசியலமைப்பு தரும் பல்வேறு உரிமைகள் நம்மை விட்டு வேகமாக அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலச் சூழலில் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையான ஜனநாயக உணர்வோடு மதச் சார்பற்ற நாட்டில் வாழ்வது கனவாகிவிடுமோ என்ற ஏக்கமும் நிலவுகிறது.

'ஒன்றியத்தில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்னும் நிலை மறைந்து, ஒற்றைத்தன்மை கல்வித் தொடங்கி கலாச்சாரம் வரை திணிக்கப்படுவதைக் காண்கின்றோம். பன்மைத்தன்மையே படைப்பின் நோக்கம் என்பதையும், நம் நாட்டின் அரசியல் தத்துவம் என்பதையும் தவிர்த்து, எல்லாம் ஒன்றே என்ற குடையின் கீழ் இணைக்கும் சதி திட்டமிட்டு அரங்கேற்றப்படுவது நாம் காணும் சமூகச் சூழலாகும்.

இந்நிலை மாறவும், 'யாவரும் கேளிர்' என்ற பொதுமை உணர்வு பாதுகாக்கப்படவும் நமது இந்திய நாட்டிற்காய் மார்ச் மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமையை நோன்பும் இறைவேண்டலுக்குமான நாளாகச் செலவிட இந்திய ஆயர் பேரவை நமக்கு அழைப்பு விடுத்துள்ளது. நமது இறைவேண்டல், நம் நாட்டின் ஒற்றுமையை சமூக, சமய நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பட்டும். கீழ்காணும் சில இறைவேண்டல் வழிமுறைகளை ஆயர் பேரவைப் பரிந்துரைக்கிறது. இவற்றை நாமும் பின்பற்றி நம் பங்குகளில் இந்திய நாட்டின் நலனுக்காகவும் விரைவில் வரவிருக்கும் பொதுத்தேர்தலில் நாட்டை




மதச்சார்பின்மையிலும் ஜனநாயகத்திலும் வழிநடத்தும் தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவும் வேண்டுவோம்.

1. தொடர்செபமாலை
2. இறை இரக்க நவநாள் மற்றும் செபமாலை
3. இரவு விழிப்புச் செபம்
4. சிலுவைப் பாதை
5. நற்கருணை ஆராதனை
6. 40 மணி நேர நற்கருணை ஆராதனை

இந்த இறைவேண்டல் முயற்சி நமது இந்திய நாட்டில் அமைதியையும், சமய சமூக நல்லிணக்கத்தையும் கட்டி எழுப்பும் கருவியாய் மாறுவதாக! நமது மறைமாவட்டத்தில் மார்ச் 22-ம் நாள் இறைச்சகுளம் கல்வாரி பயணம், இந்த கருத்துக்காக நடத்தப்படும். கல்வாரி பயணத்திற்கு அனைவரும் வந்து நாட்டுக்காக வேண்டுதல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பங்குத் தந்தையர்களின் வசதிக்கு ஏற்றவாறு பங்குகளில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

***அன்புடன்,***



**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# இளம் குருமடச் செய்திகள்

### விளையாட்டுப் போட்டிகள்

08.03.2024 அன்று குருமாணவர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் மரியாகிரி புனித மரியன்னை பள்ளிகூட மைதானத்தில் வைத்து நடைபெற்றது. இதில் குருமாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

### ஆண்டிறுதி தேர்வுகள்

2023-24 ஆண்டிறுதி தேர்வு, 09.03.2024 முதல் 18.03.2024 வரை நடைபெற்றது. அருட்சகோதரர்கள் அனைரும் இதில் பங்கேற்றனர்.

### புனித பயணம்

ஆண்டிறுதி தேர்வினை தொடர்ந்து வேளாங்கண்ணி, பூண்டி ஆகிய புனித தலங்களுக்கு 18.08.2024 முதல் 20.03.2024 வரையுள்ள நாட்களில் அதிபர் தந்தை மற்றும் துணைஅதிபர் தந்தை அவர்களோடு இணைந்து அருட்சோதரர்கள் புனித பயணம் மேற்கொண்டனர்.

### பிரியாவிடை

இளம்குருமட பயிற்சியை நிறைவு செய்து உயர்குருமடம் செல்லவிருக்கின்ற நான்காம் ஆண்டு பயிலும் நான்கு அருட் சகோதரர்களுக்கு 21.03.2024 அன்று குருமடத்தின் சார்பாக பிரியாவிடையும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

# இறச்சகுளம் சிலுவை பயணம்

### நாற்பதாம் வெள்ளி சிலுவை பாதை

இறைமகன் இயேசுவின் கல்வாரி மலை நோக்கிய திருப்பயணத்தை தியானிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய மறை மாவட்டத்தில் தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலம், இறச்சகுளத்தில் வைத்து நடைபெறும் திருச்சிலுவைப்பாதை இவ்வாண்டும், 22.03.2024 நாற்பதாம் வெள்ளியன்று மாலையில் நடைபெற்றது. இதில் நாகர்கோவில் மறைவட்ட



முதன்மை குரு பேரருட்தந்தை ஜாண்குமார் அடிகளார் அவர்கள் தொடக்கவுரையாற்றி அனைவரையும் வரவேற்றார்கள். தொடர்ந்து சிலுவைபாதை நடைபெற்றது. இறுதியில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் ஆசி உரையுடனும், திருத்தல இணை அதிபர் அருட்தந்தை சுனீஷ் குமார் அவர்களின் நன்றி உரையுடன் நிறைவுற்றது.

இந்நிகழ்வுகளை திருத்தல அதிபர் அருள்தந்தை வில்பிரைட், இணை அதிபர் அருள்தந்தை சுனீஸ் குமார், திருத்தல மக்கள் மற்றும் நாகர்கோவில் மறைவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் இணைந்து சிறப்பாக ஒழுங்குப்படுத்தினர்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்பு பணி அறிவுரைக் குழு கூட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்பு பணி அறிவுரைக் குழு கூட்டம் 16.03.2024 அன்று கழுவன்திட்டை, MIDS அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தை மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் ஆரம்ப ஜெபத்துடன் தொடங்கி வைத்தார்கள். மறைமாவட்ட முதன்மை குரு Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்க, திரு. M. அருள்தாஸ், மேய்ப்பு பணி அறிவுரைக் குழு செயலர் அவர்கள் அறிக்கை வாசித்து சமர்ப்பித்தார்கள்.

தொடக்க உரையாற்றிய மேதகு ஆயர் அவர்கள் மார்த்தாண்டம் மறைமாவட்ட மக்களின் வளர்ச்சி பற்றியும், Marthandam People Development Nidhi Ltd. -ன் புதிய கிளைகள் நாகர்கோவில் மற்றும் நித்திரவிளை ஆகிய இடங்களில் தொடங்குவது பற்றியும், மந்தாரம்புத்தூர் கட்டிட வழக்கு தீர்வு பற்றியும், குழித்துறை தாபோர் தியான இல்லத்தை மறைமாவட்ட 7 நற்கருணை சிற்றாலயங்களுடன் இணைப்பது பற்றியும், திருச்சி, நல்லநாதபுரம், கள்ளிக்குளம், விருதுநகர் ஆகிய இடங்களில் மறைபரப்பு பணிகள் பற்றியும், பெருவிளை புனித தேவசகாயம்

திருத்தலத்தின் அருகாமையிலுள்ள 7 சென்ட் நிலம் வாங்கும் முயற்சி பற்றியும் அதற்காக Bond கொடுத்து, Share மூலம் நிதி திரட்ட வேண்டும் எனவும் உரையாற்றினார்கள்.

தொடர்ந்து மறைமாவட்ட பொதுச்சட்டங்கள் குறித்து மேதகு ஆயர் அவர்கள் விளக்க உரையும், உறுப்பினர்களோடுள்ள கலந்துரையாடல்களும் நடைபெற்றது. பேராலயம் கட்டுமான பணிகள் மற்றும் நிதி நிலமை குறித்து பேராலய பங்குத்தந்தையும் மறைமாவட்ட முதன்மை குருவுமான Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் பேசினார்கள்.

HOM நிறுவனம் மற்றும் Marthandam Medical Mission பற்றி இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அவர்களும் பெருவிளை புனித தேவசகாயம் திருத்தலம் பற்றி அருட்தந்தை வில்பிறைட் அவர்களும், மலங்கரை கத்தோலிக்க இயக்க செயல்பாடுகள் மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் நினைவு பாதயாத்திரை ஏப்ரல் 7 -ம் தேதி நடத்துவது பற்றி அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்களும் உரையாற்றினார்கள்.

இறுதியாக மேய்ப்பு பணி அறிவுரைக் குழு செயலர் திரு. M. அருள்தாஸ் அவர்களின் நன்றி உரையோடும், மேதகு ஆயர் அவர்களின் ஆசியோடும் கூட்டம் இனிது நிறைவுபெற்றது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**ஏப்ரல்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 19, 20 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## மகளிர் தினவிழா

அகிலஉலக பெண்கள் தினம் ஆண்டுதோறும் மார்ச் 8-ம் தியதி கொண்டாடப்பட்டு வருகின்றது. மிட்ஸ் நிறுவனமானது 08.03.2024 அன்று தேமானூர் ஆலய சமூகநல கூடத்தில் வைத்து பெண்கள் தினவிழாவை சிறப்பித்தது. மதியம் 2 மணிக்கு திருமதி. மலர்வதி அவர்களால் பெண்களில் செலவிடுவோம் வளர்ச்சியை வேகப்படுத்துவோம் என்ற மையக்கருத்தை அடிப்படையாககொண்டு மகளிருக்கு ஒருமணி நேர கருத்தரங்கு நடத்தப்பட்டது. தொடர்ந்து மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. விழாவில் அருட்சகோதரி இம்மானுவேல், திருமதி ஏஞ்சல், திருமதி. மலர்வதி, திருமதி சோபனா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் அனைவரையும் வரவேற்று துவக்கவுரையாற்றினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி பெண்களின் சிறப்புகளை கூறி பெண்களை வாழ்த்தினார்கள். திருமதி ஏஞ்சல், திருமதி மலர்வதி ஆகியோர் பெண்கள் தினவாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் தங்களுடைய சுய முயற்சியால் குழந்தைகளை உயர்வடைய செய்த திருமதி பாப்பா, சூழியல் காப்பாளர் திருமதி மரியறோஸ், உழைப்பால் உயர்ந்த திருமதி ஷைலா, மாற்றுத்திறனாளியாய் இருந்து சாதித்த திருமதி புஷ்பம் ஆகியோர் மேதகு ஆயர் அவர்களால் விழாமேடையில் பொன்னாடை போர்த்தப்பட்டு கேடயம் வழங்கி கவுரவபடுத்தப்பட்டனர். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.

## மரியன் இயக்கம் – சிறுதொழில் கடனுதவி

மிட்ஸ் மரியன் இயக்கத்தில் மறைமாவட்டத்தில் உள்ள விதவை மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள், மாதாந்திர கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆண்டுதோறும் சிறுதொழில் செய்ய வட்டியில்லா கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தஆண்டிற்கான

கடன் வழங்கும் நிகழ்வானது 13.03.2024 அன்று மறைவாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. முனைவர் பிபி அவர்களால் பெண்கள் முன்னேறும் வழிகள் குறித்தஒருமணி நேர கருத்தரங்கு வழங்கப்பட்ட பின் ஆயர் அவர்கள் தலைமயுரையாற்றி பயனாளிகளை ஊக்கப்படுத்தினார்கள். பின்னர் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் மற்றும் திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் ஆயர் அவர்கள் பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கும் நிகழ்வினை துவங்கி வைத்தார்கள். தொடர்ந்து 107 பயனாளிகளுக்கும் சிறுதொழில் செய்வதற்காக கடனுதவி வழங்கப்பட்டது. பின்னர் மதியஉணவுடன் கூட்டம் நிறைவுபெற்றது.

## நலத் திட்டஉதவிகள்

1. 20.02.2024 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 10 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5,000/- வீதம் 10 நபர்களுக்குரூபாய் 50,000/- வழங்கப்பட்டது.

2. 21.02.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தின் கீழ் செயல்படும் 10 சுய உதவி குழுக்களில் உள்ள 40 உறுப்பினர்களுக்கு ரூபாய் 20,00,000/- வழங்கப்பட்டது.

3. 22.02.2024 அன்று ஆஸ்தி திட்டத்தின் வழியாக உயர் கல்வி படிக்கும் 8 மாணவமாணவிகளுக்கு நபருக்கு ரூபாய் 20,000/- வீதம் 1,60,000/- கல்வி கடன் வழங்கப்பட்டது.

4. 22.02.2024 அன்று தேனீ வளர்த்தல் மற்றும் தேன் தயாரிப்பு தொழில் செய்ய பயிற்சிபெற்ற 25 உறுப்பினர்களுக்கு நபருக்கு ரூபாய் 10,000/- வீதம் 2,50,000/- கடனாக வழங்கப்பட்டது.

5. 23.02.2024 அன்று குடும்பம் வாழ்வுபெறல் திட்டத்தின் வழியாக பயன்பெற்று வரும் 55 பயனாளிகளுக்கு சிறுதொழில் செய்ய ரூபாய் 8,30,000/- உதவித் தொகை வழங்கப்பட்டது.

6. 28.02.2024 மற்றும் 29.02.2024 ஆகிய தினங்களில் தேனீ வளர்த்தல் மற்றும் தேன் தயாரிப்பு குறித்த பயிற்சியானது திரு. ஜூலியஸ் பாண்டியன் அவர்களால் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. பயிற்சியில் கலந்துகொண்ட 25 பயனாளிகளுக்கும் நபருக்கு ரூபாய் 10,000/- வீதம் மொத்தம் ரூபாய் 2,50,000/- தேனீவளர்ப்பு தொழில் செய்ய கடனாக வழங்கப்பட்டது.



7. 06.03.2024 அன்று All for Life Life for All திட்டத்தின் வழியாகவருமானம் ஈட்டும் சிறுதொழில்கள் செய்யமிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 22 உறுப்பினர்களுக்கு நபருக்கு ரூபாய் 7,000/- வீதம் மொத்தம் ரூபாய் 1,54,000/- கடனாக வழங்கப்பட்டது.

8. 09.02.2024 அன்று Pharmacy 777 Higher Education Scholarship திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் 24 மாணவிகளுக்கு ரூபாய் 4,80,000/- கல்வி கடனுதவி வழங்கப்பட்டது.

9. 09.02.2024 அன்று டிவைன் மெர்சி உயர்கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் 14 மாணவமாணவிகளுக்கு ரூபாய் 3,50,000/- வழங்கப்பட்டது.

10. 09.02.2024 அன்று தலித் திட்டத்தின் கீழ் சிறுதொழில்கள் செய்ய 13 பயனாளிகளுக்கு ரூபாய் 1,30,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

1. 16.02.2024 அன்று கல்லுவிளை சமூகப் பணிமையத்தில் வைத்து விண்ணைத் தொடுதிட்டத்தின் சார்பாக Transition Planning Event நடைபெற்றது. இந்தநிகழ்வில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம், CCI In charge அருட்தந்தைமரிய அற்புதம், திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி வினிதாராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

2. 21.02.2024 அன்று தேனீ வளர்த்தல் மற்றும் தேன் தயாரிப்பு குறித்த பயிற்சியானது திரு. ஜூலியஸ் பாண்டியன் அவர்களால் நடைக்காவு ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். இரண்டு நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் 25 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

3. 26.02.2024 அன்று மஞ்சத்தோப்பில் வைத்து சுரேஷ் கண் மருத்துவமனை மற்றும் மிட்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 69 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

4. 04.03.2024 அன்று கன்னியாகுமரி மலங்கரைபவனில் வைத்து செல்போன் பழுதுபார்க்கும் பயிற்சியானது மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. இரண்டு நாட்கள்

நடைபெற்ற இப்பயிற்சியில் அகஸ்தீஸ்வம் மற்றும் மந்தாரம்புதூர் கிளஸ்டர்களில் உள்ள 25 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

5. 06.03.2024 அன்று கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் ஆரி தையல் கலை பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். 18 நாட்கள் நடைபெற இருக்கும் இப்பயிற்சியினை திருமதி விஜயலெட்சுமி அவர்கள் நடத்தி வருகிறார்கள். இப்பயிற்சியில் நாகர்கோவில் பணிமண்டலத்தில் உள்ள 20 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

6. 09.03.2024 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து தளிர்கள் உலகம் திட்டத்தின் பயாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் 92 மாணவர்களும், 70 தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

7. 11.03.2024 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் சார்பாக சமூக பாதுகாப்பு குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. கருத்தரங்கினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்து துவக்கவுரையாற்றினார்கள். தொடர்ந்து திரு. ஜூலியஸ் பாண்டியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதனை தொடர்ந்து Dr. செங்குநாயகம் அவர்கள் பாம்பு கடி, மாரடைப்பு, தண்ணீரில் மூழ்குதல், தேள் கடி, வாகன விபத்து போன்றவை ஏற்பட்டால் எப்படி முதலுதவி செய்யவேண்டும் என்ற கருத்தரங்கு நடத்தினார்கள். இறுதியில் சிறப்பாக பணிசெய்துவரும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. இந்தகருத்தரங்கில் மிட்ஸ் பணியாளர்கள், மைக்ரோ இன்சூரன்ஸ் முகவர்கள் என 45 பேர் கலந்துகொண்டனர்.

8. 15.03.2024 அன்று சூசைபுரம் ஆலயத்தில்வைத்து சுரேஷ் கண் மருத்துவமனை மற்றும் மிட்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய இலவசகண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 50-க்கும் மேற்பட்டபயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

9. 18.03.2024 அன்று மிட்ஸ் மண்டல அலுவலகம் பெருவிளையில் வைத்து அழகுக்கலை பயிற்சி திருமதி ஜெசில்தா அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். 10 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சியில் 17 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றனர்.



# MCYM
## Youth Apostolate

தவக்காலத்தை முன்னிட்டு மார்த்தாண்டம் மறைமாவட்ட MCYM சார்பாக 09.03.2024 அன்று மறைமாவட்டம் மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களுக்காக இணைந்து களியக்காவிளை Marian Spirituality Centre-ல் வைத்து சிலுவைபாதை, தவகால தியானம், நற்கருணை ஆராதனை, பாவசங்கீர்தனம், நடத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து MCYM ஓராண்டு திட்டம் வெளியீடு விழாவும் நடத்தபட்டது. அதில் மேதகு ஆயர் அவர்கள் கலந்து கொண்டு ஓராண்டு திட்டத்தை வெளியிட, இயக்குனர், அருட்சகோதரி ஊக்குநர் மற்றும் தலைவர் இணைந்து பெற்று கொண்டார்கள். இந்நிகழ்வுகளில் 60-ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCYM இளையோர் சார்பாக மேரி மக்கள் துறவற சபை மார்த்தாண்டம் மாகாண புதிய தலைமை சகோதரி மதர் றோஸ் பிரான்சிஸ் அவர்களை சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள்.

## பேராலயக் கட்டுமானபணிக்கான நன்கொடைகள் (மார்ச் - 2024)

| S.No. | Name | Amount |
|---|---|---|
| 1. | Karumanoor | 13,100 |
| 2. | Parvathipuram | 4,000 |

HOM அனைத்து பணியாளர்களின் கூட்டம் 20.03.2024 அன்று HOM சிறப்புப் பள்ளியில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் HOM சிறப்புப் பள்ளியின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட விடியலைத் தேடி என்ற நிகழ்ச்சியின் கருத்தாய்வு நடைபெற்றது. விடியலைத் தேடி நிகழ்ச்சியின் முதன்மை ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்ட திரு. நிக்கோலஸ், திரு. அருள் மற்றும் தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் மற்றும் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு கேடயமும் வழங்கப்பட்டது.

பின்னர் HOM சார்பாக ஏப்ரல் மற்றும் மேய் மாதங்களில் செயல்படுத்துவதற்கு வேண்டிய பணிகள் குறித்து இயக்குநர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஏப்ரல் 6-ம் தியதி மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, மரியாகிரி மலங்கரை ஸ்கூல் அஃப் காமர்ஸ்-ல் வைத்து, காரக்கோணம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சார்பாக மருத்துவ முகாம் நடத்தவும், தீர்மானிக்கப்பட்டது.

ஏப்ரல் 8-ம் தியதி மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு தின நிகழ்வுகளில் பங்கேற்பது அன்றைய தினம் நடக்கும் நிகழ்வில் ஏழைப் பெண்களுக்கு திருமணநிதி உதவி வழங்குவது



குறித்தும் மே 27-ம் தியதி தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவையின் நலவாழ்வு இயக்கம் சார்பாக சுங்காங்கடை புனித சவேரியார் செவிலியர் கல்லூரியில் வைத்து நடைபெறும் தமிழக மறைமாவட்ட அனைத்து செவிலியர்களின் கருத்தரங்கில் நமது மறைமாவட்டத்திலுள்ள செவிலியர்களை பங்கேற்கச் செய்யவும், அதற்கு வேண்டிய ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

### வலி நிவாரண பராமரிப்பு சிகிட்சை (Palliative Care)

HOM சார்பாக நடைபெறும் வலி நிவாரண பராமரிப்பு சிகிட்சை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மரியாகிரியைச் சேர்ந்த திரு. சுரேந்திரன் என்ற நோயாளிக்கு Walker வழங்கப்பட்டது. மேலும் கண்ணக்கோடை சார்ந்த திருமதி ஷீபா என்பவருக்கு மருத்துவ கட்டில் வழங்கப்பட்டது. இச் சேவையை அருட்சகோதரி ஐஸ்வரியா, திருமதி ஷீபா மற்றும் ஆஷா ஆகியோர் திறம்பட செய்து வருகின்றனர்.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



**அருட்தந்தை ரதீஷ் ரிச்சார்ட்**
**ஏப்ரல் 03**



**அருட்தந்தை செலஸ்டின்**
**ஏப்ரல் 06**



**பேரருட்தந்தை S. வர்கீஸ்**
**ஏப்ரல் 23**



**அருட்தந்தை G. வர்கீஸ்**
**ஏப்ரல் 23**



**அருட்தந்தை ஜார்ஜ் தாவரத்தில்**
**ஏப்ரல் 23**



**அருட்தந்தை G. ஜீவின் ஜார்ஜ்**
**ஏப்ரல் 23**



**அருட்தந்தை வில்பின் விஜு**
**ஏப்ரல் 23**



**அருட்தந்தை பீட்டர் ஆனந்த்**
**ஏப்ரல் 29**



## ஆயரின் மார்ச் மாத நிகழ்வுகள்



- 2 ➤ Malankara School of Word and Worship-ல் இறையியல் பயில்பவர்களுக்கு வகுப்பு எடுத்தார்.
- 2 ➤ தாபோர் தியான இல்லத்தில் தியான உரையாற்றினார்.
- 3 ➤ செக்கிட்டுவிளை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 5 ➤ மார்த்தாண்டம் மேரிமக்கள் துறவற இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➤ அருட்தந்தை சஜின் அவர்களின் அப்பாவின் நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.
- 7 ➤ YMCA மேலாண்மை குழு உறுப்பினர்களின் கூடுகையில் கலந்துக்கொண்டார்.
- 8 ➤ MIDS சார்பாக தேமானூரில் நடைபெற்ற பெண்கள் தின கொண்டாட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.
- 9 ➤ MCYM – Year Plan Inauguration நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.
- 9 ➤ Malankara School of Word and Worship-ல் இறையியல் பயில்பவர்களுக்கு வகுப்பு எடுத்தார்.
- 10 ➤ புங்கறை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

10 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற மரியாயின் சேனை கொமித்சிய விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

11 ➢ நாகர்கோவிலில் நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

12 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற MPDN Ltd. கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

13 ➢ MIDS அலுவலகத்தில் நடைபெற்ற Marian Movement கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

15 ➢ மாவேலிக்கரை மறைமாவட்டத்தின் நற்செய்தி பெருவிழாவில் தியான உரை வழங்கினார்.

16 ➢ MIDS அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட மேய்ப்புபணி அறிவுரை குழுவின் கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

19 ➢ MIDS அலுவலகத்தில் நடைபெற்ற Solar Project தொடக்க நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

20 ➢ பஞ்சாப் மேரி மக்கள் மாகாணத்தில் அருட்சகோதரி வெர்ஜின் அவர்களின் நல்லடக்க திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ நாற்பதாம் வெள்ளியை முன்னிட்டு இறச்சகுளம் திருத்தலம் சார்பாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்த சிலுவைப்பாதையில் கலந்துக்கொண்டு, தவக்கால தியான உரை வழங்கினார்.

24 ➢ ஓசானா திருச்சடங்குகள் மற்றும் திருப்பலியை மார்த்தாண்டம் போராலயத்தில் நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

25 ➢ மங்கள வார்த்தை திருநாளை முன்னிட்டு மரியாகிரி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

28 ➢ பெருவிளை திருத்தலத்தில் பாதங்கழுவுதல் திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

29 ➢ விமலபுரம் ஆலயத்தில் புனித வெள்ளி திருச்சடங்குகள் நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

30 ➢ விமலபுரம் ஆலயத்தில் உயிர்ப்பு திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.




## இம்மாதம் நினைவு கூர

ஏப்ரல் 2024

05 – அனைத்து விசுவாச சாட்சிகள்

07 – புது ஞாயிறு

08 – லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு

8 

12 – திருதந்தை புனித யூலியோஸ்

ஆப்ரஹாம் மார் யூலியோஸ் ஆண்டகையின் பெயர்விழா

13 – மார் செறாபியோன்

14 – உயிர்ப்புக்குப்பின் இரண்டாம் ஞாயிறு

மார் செமஊன் பெர்ஸாபோயோ

23 

21 – உயிர்ப்புக்குப்பின் மூன்றாம் ஞாயிறு

23 – மார் கீவர்கீஸ்

25 – நற்செய்தியாளர் புனித மாற்கு

25 


27 – புனித கிளீற்றஸ்

28 – உயிர்ப்புக்குப்பின் நான்காம் ஞாயிறு

ஐசக் மார் யுஹானோன் ஆண்டகையின் நினைவு

29 – சியன்னா நகரின் புனித கத்தரீனா

30 – செபதேயுவின் மகன் மார் யாக்கோபு

30 

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்பு பணி அறிவுரைக் குழு கூட்டம்





## நாற்பதாம் வெள்ளி சிலுவைப்பாதை - இறச்சகுளம்









## MCYM






ஆண்டு திட்டம் வெளியீடு









தவக்கால சிலுவைப்பாதை மற்றும் தியானம்

## MIDS



மரியன் இயக்கம் -
சிறுதொழில் கடனுதவி



மகளிர் தினவிழா கொண்டாட்டம்



இலவச கண் பரிசோதனை முகாம்